# கொ/இந்துக் கல்லூரி, கொழும்பு – 4
## முதலாந் தவணைப் பரீட்சை – 2016

**வரலாறு I**

**தரம் - 10**

சுட்டெண்:................................ நேரம் : 1 மணி

**பகுதி – I**

**பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.**

1. இலங்கையின் உள்நாட்டு இலக்கிய மூலாதாரமான தீபவம்சம் எழுதப்பட்ட ஆண்டு எது?
   i. கி.பி 7 ஆம் நுற்றாண்டு
   ii. கி.பி 4 ஆம் நுற்றாண்டு
   iii. கி.பி 5 ஆம் நுற்றாண்டு
   iv. கி.பி 3 ஆம் நுற்றாண்டு

2. பின்வருவனவற்றுள் போர்க்காவியமாக அமைவது?
   i. சத்தர்மாலங்கார
   ii. மயூரசந்தேசய
   iii. திசரசந்தேசய
   iv. பெரகும்பா சிரித்த

3. பிலிப்ஸ் பல்டியஸ் என்பவரின் இலங்கை பற்றிய நூல் எது?
   i. போல்டியசின் இலங்கை வரலாறு
   ii. ரிபைரோவின் இலங்கை வரலாறு
   iii. அன்றைய இலங்கை
   iv. இலங்கை பௌத்த இராச்சியம்

4. இலங்கையில் வாழ்ந்ததாக கருதப்படும் மனித குலம் பின்வருவனவற்றுள் எது?
   i. ஹோமோ ரெக்ஸ்
   ii. ஹோமோ நியண்டதால்
   iii. ஹோமோ சேபியன்ஸ்
   iv. ஹோமோ ஹெபிலிஸ்

5. பனாகடுவ செப்பு சாசனம் எவ் மன்னனுக்கு நன்றிக்கடன் செலுத்தும் முகமாக அமைந்துள்ளது.
   i. சித்தாறும்பி புத்தநாயக
   ii. மகாநாம தேவநாயக
   iii. மகாசேன மன்னனுக்கு
   iv. இளநாக மன்னனுக்கு

6. பொலன்னறுவைக்காலத்தில் பயன்படுத்தப்பட்ட நாணயம் எது?
   i. ஹபண
   ii. கம்பமஸ்ஸ
   iii. புராண
   iv. தரண

7. இலங்கையில் கற்காலத்திற்குரிய ஆதாரம் முதலில் கண்டுபிடிக்கப்பட்ட இடம் எது.
   i. இரணைமடு
   ii. அம்பாந்தோட்டை
   iii. இரத்தினபுரி
   iv. பூந்தல

8. காலநிலை வலயங்கள் தீர்மானிக்கப்படுவது எதன் அடிப்படையிலாகும்.
   i. வருடாந்த வெப்பநிலை
   ii. வருடாந்த மழைவீழ்ச்சி
   iii. வருடாந்த பனிப்பொழிவு
   iv. உலர்வலய வெப்பநிலை

9. களுத்துறை மாவட்ட புளத்சிங்களவில் உள்ள பாகியன்கல குகை எவ்வலய மனிதனின் வரலாற்றுத்தரவை அறிய உதவுகிறது.
   i. தாழ்நில ஈரவலய வரலாற்றுக்கு முற்பட்ட மனிதனின்
   ii. தாழ்நில இடை ஈரவலய வரலாற்றுக்கால மனிதனின்
   iii. உயர் மலைநாட்டு ஈரவலய முன் வரலாற்றுக்கால மனிதனின்
   iv. மலை நாட்டு ஈரவலய வரலாற்றுக்கால மனிதனின்

10. தாழ்நில உலர்வலயக் குகையாக அமைவது எது?
   i. புத்தல
   ii. பெல்லன்பதி பெலஸ்ஸ
   iii. பெலிலென
   iv. அலிகல

11. தாழ்நில ஈரவலய நீர்ப்பரப்பில் காணப்பட்ட நன்னீர் மீன்கள் எவை?
   i. கெண்டை
   ii. கெளுத்தி
   iii. தித்தயா
   iv. விரால்

12. இரும்பு யுகம் என அழைக்கப்படும் காலமாக அமைவது
   i. முன் வரலாற்றுக் காலம்
   ii. வரலாற்றுக்கு முற்பட்ட காலம்
   iii. வரலாற்றுக் காலம்
   iv. கற்காலம்

13. அஸ்தியுடன் கூடிய மட்பாண்டங்கள் உள்ள களிமண் ஓடக் கல்லறைகள் அமைவு பெற்றுள்ள இடமாக அமைவது.?
   i. பெல்லன்பதி பெலஸ்ஸ
   ii. உடரஞ்சாமடம்
   iii. பட்ட தொம்பலன
   iv. பாகியன்கல

14. கல்வெட்டுக்களில் காணப்படும் "அவரண" எனும் சொல் குறிப்பது?
   i. வாய்க்கால்
   ii. விகாரை
   iii. குகை
   iv. அணைக்கட்டு

15. மக்களால் கைவிடப்பட்ட குளக்கிராமம் கல்வெட்டுக்களில் எவ்வாறு அழைக்கப்பட்டது?
   i. பட்டானக்காம
   ii. ஓலகம்
   iii. நியம்கம்
   iv. வட்ட கீ காம

16. பிராமி கல்வெட்டுக்களில் குடும்பத்தலைவன் எவ்வாறு அழைக்கப்பட்டார்?
   i. கமிக
   ii. கிராமிக
   iii. குர்ஹபதி
   iv. தலைவன்

17. தம்புள்ளையில் அன்றைய சமுகத்தில் வாழ்ந்த பருமக முதலிய பிரபுக்களால் பயன்பட்டதாக கருதப்பட்ட கல்லறை மயானம் எது?
   i. இப்பன் கட்டுவ கல்லறை மயானம்
   ii. ஹல்துமுல்ல கல்லறை மயானம்
   iii. பெரகல கல்லறை மயானம்
   iv. பதிராஜ வெல மயானம்

18. திஸ்ஸமகாராம குளத்தை அமைத்த இளநாக மன்னன் ஆட்சியில் எவ்நதிக்கு குறுக்காக அணை கட்டப்பட்டது.
   i. கலா ஓயா
   ii. களனி ஓயா
   iii. கிரிந்தி ஓயா
   iv. மல்வத்து ஓயா

19. வேலியிட்டுப் பாதுகாக்கப்படாத கிராமங்கள் எவ்வாறு அழைக்கப்பட்டது.
   i. அபரிகித்தகம
   ii. பரிகித்தகம
   iii. பட்டானகம
   iv. வேலிக்கிராமம்

20. பனாகடுவ செப்பு சாசனத்தில் அநுராதபுரம் எவ்வாறு அழைக்கப்பட்டது.
   i. அநுரகம
   ii. புலஸ்திநகர்
   iii. அநுராத நகர்
   iv. நுருபுரம்

21. கற்கால மனிதன் காட்டுப்பலா விதைகளைச் சுட்டு சாப்பிட்டமைக்கான ஆதாரமாக விளங்கும் குகை.?

i. அலிகல
ii. பொத்தான
iii. பெலிலென
iv. இராவணன் எல்ல

22. இலங்கையின் உலர் வலயத்தில் வாழும் மக்கள் குளத் தொகுதியை எவ்வாறு அழைத்தனர்.?
i. வெப்பிரபாதனய
ii. எல்லங்காவ
iii. வாய்க்கால் தொகுதி
iv. விவசாய நீர் தொகுதி

23. இலங்கையை ஆண்ட முதல் மன்னனாக கருதப்படுபவர்?
i. ஆமண்ட காமினி
ii. தேவநம்பிய தீசன்
iii. விஜயன்
iv. பண்டுகாபயன்

24. புனித வெள்ளரசு மரம் நடும் வைபவத்திற்கு தேவநம்பிய தீசன் மன்னனால் அழைக்கப்பட்ட பிரதேச தலைவர்களின் இடங்கள்
i. கதிர்காமம், மாகம
ii. மாதோட்ட, ஊராதொட்ட
iii. கதிர்காமம், சந்தனகாமம்
iv. மாதோட்டம், மாகம

25. குபேரக் கடவுளாகத் தன்னைக் கருதிக் கொண்டவர்.
i. 1ம் காசியப்பன்
ii. நிஸ்ஸங்க மல்ல மன்னன்
iii. மகாசேனன்
iv. தாதுசேனன்

26. பிக்குகளுக்கு தானம் வழங்குவதில் பிரச்சினைகள் ஏற்படும் போது பத்துக்கிராம பிரதானிகளும் சேர்ந்து அவற்றைத் தீர்க்க வேண்டும்'' எனக் கூறும் கல்வெட்டு எது?
i. பாகியன்கல
ii. களுதிய பொகுண
iii. இசுறுமுனிய
iv. கணேகந்த

27. வசப மன்னனின் வல்லியபுர பொற் சாசனத்தில் ரிஷிகிரி எனும் அமைச்சர் நிர்வகித்த நகரமாக கருதப்படுவது.?
i. கண்டி
ii. யாழ்ப்பாணம்
iii. கொழும்பு
iv. அம்பாந்தோட்டை

28. தனது முதுமை பருவத்தில் லிஸ்பனில் வாழ்ந்த போது தனது இலங்கை அனுபவங்களை வைத்து நூல்கள் எழுதியவர்
i. பிலிப்பஸ் பொல் தெவுஸ்
ii. ஹியுங் சாங்
iii. றொபட் நொக்ஸ்
iv. ஜோவாவோ ரிபைரோ

29. பின்வருவனவற்றுள் பஞ்ச வஸ்துக்களாக அமைபவை
i. குடை, ஆலவட்டம், மிதியடி, மங்களவாள், கிரீடம்
ii. ஆலவட்டம், சாமரை, குடை, நெற்றிப்பட்டம், கிரீடம்
iii. மங்களவாள், பட்டி, குடை, மிதியடி, சாமரை
iv. ஆலவட்டம், சாமரை, பாதணிகள், மங்களவாள், நெற்றிப்பட்டம்

30. முதன் முதலில் இந்நாட்டில் பாரிய குளங்களை அமைக்க காரணமான மன்னன் யார்?
i. முகலன்
ii. வசபன்
iii. மகாசேனன்
iv. 2ஆம் அக்போ

31. பண்டைய அரசவையில் வர்த்தக நடவடிக்கைக்கான தலைவர் எவ்வாறு அழைக்கப்பட்டார்.?
    i. பன பெடிக
    ii. ரூப அதெக
    iii. அச அதெக
    iv. பன அதெக

32. இலங்கையின் அரசியல் அதிகாரத்தை முறையான விதத்தில் உருவாக்கியதில் பங்களிப்புச் செய்தவர்.?
    i. காவன்தீசன்
    ii. தேவநம்பியதீசன்
    iii. துட்டகைமுனு
    iv. விஜயபாகு

33. வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதனின் தொழிநுட்பமாக அமையாத கூற்று?
    i. கல்லாயுதங்கள் 4.5 சென்ரிமீற்றர் அளவுக்கு உட்பட்டமை
    ii. கல்லாயுதங்கள் பளிங்குப் பாறைகளால் வடிவமைக்கப்பட்டது.
    iii. கேத்திர கணித உருவமைப்புடன் தயாரிக்கப்பட்டது.
    iv. உராய்தல், தட்டையாக்கல், தோண்டுதல், வெட்டுதலுக்கு ஏற்ற வகையில் தயாரிக்கப்பட்டது.

34. 2ம் இராஜசிங்கனால் கைதியாக்கப்பட்டு பத்தொன்பது வருடங்கள் கண்டிச் சிறைச்சாலையில் கைதியாக இருந்த வெளிநாட்டவர் யார்.?
    i. றொபட் நொக்ஸ்
    ii. பர்னாவோ டீ. குவாரோஸ்
    iii. பிலிப்ஸ் பொல் தெவுஸ்
    iv. ரி.எம்.பெரேரா

35. சோழர் ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைத்த பெருமைக்கு உரிய மன்னன்
    i. துட்டகைமுனு
    ii. தேவநம்பிய தீசன்
    iii. அசேலன்
    iv. முதலாம் விஜயபாகு

36. மாத்தளை மாவட்டத்தில் எவ் இடத்தில் உள்ள கல்வெட்டில் போசணி அரசன் என்னும் பிராந்திய நிர்வாகி காணப்பட்டார்.
    i. தம்புள்ள
    ii. எம்புல் அம்பே
    iii. ரத்தோட்டை
    iv. களுதாவளை

37. கமிக எனும் கிராமத் தலைவர்களிடையே தோன்றிய பிரதானிகள் எவ்வாறு அழைக்கப்பட்டனர்.?
    i. தொட்ட போஜக
    ii. கிராமிக
    iii. காமினி
    iv. பருமக

38. "எல்லாள மன்னனுக்காக தாம் மேற்கொள்ளும் போர் தனது சுக நலன்களுக்கு அல்லாமல் பௌத்த சாசனத்தின் நலன்" என கூறிய மன்னன் யார்?
    i. காவன் தீசன்
    ii. தேவநம்பிய தீசன்
    iii. துட்டகைமுனு
    iv. பண்டுகாபயன்.

39. புராதன இலங்கையின் அரசியலில் ஆஸ்தான என அழைக்கப்பட்டது.?
    i. கிராமம்
    ii. நகரம்
    iii. குளக்கிளமம்
    iv. நிர்வாக மாவட்டம்

40. பண்டுகாபயன் தனது எத்தனையாவது ஆட்சி வருடத்தில் கிரமங்களுக்கு எல்லை வகுத்தான்.?
    i. ஐந்தாவது
    ii. எட்டாவது
    iii. பத்தாவது.
    iv. பதினெட்டாவது.

The National e-learning Portal for The General Education

# வரலாறு II

பகுதி I இல் முதலாவது வினா கட்டாயமானது.
பகுதி II இல் எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.

**(2 மணித்தியாலங்கள்)**

## பகுதி I

01.

(A)

இல (I) இல் கொடுக்கப்பட்டுள்ள வரலாற்று சிறப்பு மிக்க இடங்களை இலங்கை வரைபடத்திலும் இல (II) இல் கொடுக்கப்பட்டுள்ள வரலாற்று சிறப்பு மிக்க இடங்களை உலக வரைபடத்திலும் குறித்துக் காட்டுக.

(i). கிரிந்தி ஓயா, ஆண்டிகம, பெலன்பதி பெலஸ்ஸ, களனி, பூந்தல, பொம்பரிப்பு, பாஹியன்கல, இரணமடு, மாந்தை, கலா ஓயா.

(10 புள்ளிகள்)

(ii.) கொன்ஸ்தாந்தி நோபிள், நன்நம்பிக்கை முனை, மத்திய தரைக்கடல், சிந்து நதி, பத்தேவியா, போர்ணியோ, பிரித்தானியா, சிசிலி தீவு.

(08 புள்ளிகள்)

(B)

I.

a. உருவில் காட்டப்பட்டவர் யார் என குறிப்பிடுக.
b. இவர் வாழ்ந்த இடம் எது?
c. எவ் இனத்தைச் சேர்ந்தவர்?
d. இலங்கைக்கு இவர் வழங்கிய பெயர் என்ன?

Picture

(04 புள்ளிகள்)

The National e-learning Portal for The General Education

II.

a. இவ்வுருவின் பெயர் யாது?
b. இது எவ்நூற்றாண்டுக்குரியது?
c. அமைவு பெற்ற மாவட்டம் எது?
d. இவ்வுரு அமைவு பெற்றுள்ள விகாரை எது,?

Picture

(04 புள்ளிகள்)

III.

a. இவ்வுருவில் காட்டப்பட்ட வரலாற்றிடம் எது?
b. இது அமைவு பெற்றுள்ள மாவட்டம் எது? இடம் எது?
c. எவ்வலயத்தில் வாழந்த மனித இனம் பற்றி கூறுகிறது?
d. எக்கால மனிதனின் தரவை அறிய உதவுகிறது,?

Picture

(04 புள்ளிகள்)

## பகுதி II

2.

1) மூலாதாரங்கள் என்றால் என்ன? அதன் பிரதான வகைகள் எவை?
2) இலக்கிய மூலாதாரங்களை பயன்படுத்தும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள் எவை?
3) இலங்கைக்கு நேரடியாக வருகை தராது, இங்கு வந்தவர்களது நேரடி அனுபவங்களை கேட்டறிந்து எழுதிய மூலாதாரங்களை உதாரணத்துடன் விளக்குக.?
4) உள்நாட்டு மூலாதாரங்களை அநுராதபுரம் முதல் கண்டி வரையிலான கால வரையறையில் விளக்குக.

(3+4+5+6=18 புள்ளிகள்)

3.

1) தொல்பொருள் மூலாதாரங்களின் பிரதான வகைகளைக் குறிப்பிடுக?
2) கல் வெட்டுக்களின் பிரதான கல்வெட்டு வகைகளைக் குறிப்பிடுக?
3) இலங்கையின் நாணயப் பாவனையை காலரீதியில் குறிப்பிட்டு, நாணயப் பயன்பாட்டை கூறுக?
4) எழுத்தாவணமாக எழுதப்பட்டுள்ள சாசனங்களை குறிப்பிட்டு உதாரணத்துடன் விளக்குக.

(3+4+5+6=18 புள்ளிகள்)

4.

1) இலங்கையின் மானிட வாழ்க்கையின் பிரதான கால கட்டங்களை ஒழுங்கு முறையில் எழுதுக.?
2) வரலாற்றுக்கு முற்பட்ட காலம் கலாசார அடிப்படையில் எத்தனை வகைப்படும்? அவை எவை?
3) இலங்கையின் கற்கால மனிதன் வாழ்ந்த பிரதான சுற்றாடல் வலயம் பற்றி குறிப்பிட்டு அவர்களின் உணவுப்பழக்கத்தை விளக்குக?
4) வரலாற்றுக்கு முற்பட்ட கால குடியிருப்புகளினை வகைப்படுத்தி விளக்குக?

(3+4+5+6=18 புள்ளிகள்)

5.

1) பின்வரும் இடங்களில் உள்ள கல்லறை மயானங்களின் பெயர்களை எழுதுக?
   i. தம்புள்ளை
   ii. கலேவெலை
   iii. யாப்பகூவ
2) முன்வரலாற்றுக் காலத்தின் கால நிர்ணயப்படி இனங்காணப்பட்ட மூன்று மயானத்தையும் குடியிருப்பொன்றையும் பெயரிடுக?
3) வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்து முன் வரலாற்றுக் காலம் எவ்வாறு வளர்ச்சியடைந்தது என வேறுபடுத்தி விளக்குக.
4) வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தின் குடியிருப்புத்தன்மை, வாழ்க்கை முறை பற்றி விளக்குக.?

(3+4+5+6= 18 புள்ளிகள்)

6.

1) பண்டைய குடியிருப்புகளின் பரம்பலில் செல்வாக்கு செலுத்திய புவியியல் காரணிகள் 3 தருக?
2) மகாவம்சத்தில் குறிப்பிடப்படும் குளக் கிராமங்கள் 4 தருக?
3) வம்சக்கதைகள், கல்வெட்டுக்கள், மூலம் தொழில்ரீதியாக கிராமங்கள் வகைப்படுத்தப்படுதலை விளக்குக.
4) பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சிறுகுறிப்பு எழுதுக.
   I. இரணமடுப்படிவு
   II. வரலாற்றுக்கு முற்பட்ட கால கல்லாயுத தொழிநுட்பம்
   III. நதிப்பள்ளத்தாக்கு

(3+4+5+6=18 புள்ளிகள்)

7.

1) மிகப்புராதன கால முன்னேற்றகரமான விவசாய சமூகம் காணப்பட்டமைக்கு எடுத்துக்காட்டான புதை குழிகள் எவை?
2) நாட்டை ஐக்கியப்படுத்துவதில் துட்டகைமுனுவின் செயற்பாடுகள் 4 தருக?
3) புராதன காலத்தில் அரசுரிமை கிட்டிய விதத்தை உதாரணங்களுடன் விளக்குக.
4) உலர் வலய மக்கள் நீர்ப்பற்றாக்குறையை நீக்க கையாண்ட வழிமுறைகள் மூன்றினைக் குறிப்பிட்டு விளக்குக.?

(3+4+5+6= 18 புள்ளிகள்)

The National e-learning Portal for The General Education